# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 2183/26 - 2020 ජූලි මස 08 වැනි බදාදා - 2020.07.08

*2183/26 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 08 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய என்னால் (393 ஆம் அத்தியாயமான) விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய 2020, சனவரி மாதம் 09 ஆந் திகதிய 2157/44 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் மூலம் 2020, சனவரி மாதம் 09 ஆந் திகதி தாபிக்கப்பட்ட "2015, சனவரி மாதம் 08 ஆந் திகதி ஆரம்பமாகி 2019, நவெம்பர் மாதம் 16 ஆந் திகதி முடிவடைந்த காலப்பகுதியினுள் பதவிகளை வகித்த அரசாங்க உத்தியோகத்தர்கள், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் ஊழியர்கள், ஆயுதப் படைகள் மற்றும் பொலிஸ் சேவை ஆகியவற்றின் உறுப்பினர்களுக்கு ஏற்பட்டதாகச் சொல்லப்படும் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணை செய்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான சனாதிபதி விசாரணை ஆணைக்குழு" எனப்படும் விசாரணை ஆணைக்குழுவின் தற்காலப் பணிகளை நிறைவேற்றி அதன் இறுதி அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டிய 2020, யூலை மாதம் 09 ஆந் திகதி முடிவுறும் ஆறு மாத காலத்தை, சொல்லப்பட்ட சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு 2020, யூலை மாதம் 09 ஆந் திகதியிலிருந்து நான்கு மாதங்களினால், அதாவது 2020, நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி வரை இத்தால் நீடிக்கின்றேன்.*

**கோட்டாபய ராஜபக்ஷ,**
*சனாதிபதி.*

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு 01,*
*2020, யூலை 08.*